ஒன்று

பாவலர் ச.கந்தசாமி

வையைப் பதிப்பகம்
தேனி – நாகலாபுரம்
98423 70792

Copyright © 2026

s.kandasamy

ஒன்று

(வெண்பா - மரபுக்கவிதைகள்)

ஆசிரியர் – ச.கந்தசாமி
உரிமை – ஆசிரியருக்கு
பக்கங்கள் – 6 + 60 = 66
முதல் பதிப்பு – சூலை 2026
எழுத்தளவு – 12 புள்ளிகள்
நூல் அளவு – 1X8 தெம்மி
விலை – உரூ 120 /–

பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்

ISBN – 9–789393–618184

வெளியீடு
வையைப் பதிப்பகம்
நாகலாபுரம், திருவரங்கபுரம் அஞ்சல்,
வீரபாண்டி வழி, தேனி மாவட்டம். 625534
பேச – **98423 70792**
Vaiyaithamil@gmail.com

உள்ளடக்கம்

பொருள்	பக்கம்
பதிப்புரை	iii
நானும் நீயும்	1
ஒன்று	17
நானே மெய்ப்பொருள்	41

பதிப்புரை

பேரண்டப் பெருவெளியின் பேரன்புக் கவிதை

அகப்பயணத்தின் ஆழத்தைக் கவிதையாக்கும் உயர்ந்த முயற்சியில் வையைப் பதிப்பகம் பெருமையோடு வழங்கும் நூல் 'ஒன்று'. எளிமையும், இனிமையும் நிறைந்த பண்பாள ராகவும், நூல்களை நேசிக்கும் சிறந்த வாசிப்பாளராகவும் விளங்கி, தற்போது ஈரோடு மாவட்டத்தின் ஆட்சியராக மக்கள் பணியாற்றி வரும் எனது மதிப்பிற்குரிய ஐயா பாவலர் ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்கள், தன்னுள் உதித்த வெண்பாக்களைச் செதுக்கி இந்நூலை ஆக்கியுள்ளார். இந்நூல் நானும் நீயும் – ஒன்று – நானே மெய்ப்பொருள் என மூன்று பகுதிகளைக் கொண்டது.

தன்னை அறிந்துகொள்ள முயல்வது ஒரு எளிய தொடக்கம். அதில் தொடர்ந்து பயணிக்கும்போது, தனதிருப்பிற்கு ஆதாரமாக விளங்கும் இயற்கையை, பேரண்டத்தை (பிரபஞ்சத்தை), இறையாற்றலை 'நீ' என்று உருவகப் படுத்தித் தான் நடத்திய உயர்ந்த உள்முக உரையாட லையே ஆசிரியர் இந்நூலில் வெண்பாக்களாக வடித்திருக்கிறார்.

என்னுள் கலந்த தமிழ் என்மூலம் இதை வெளிப்படுத்தி யுள்ளது என்று அடக்கத்தோடு கூறும் ஆசிரியரின் தமிழா ளுமை, ஒவ்வொரு வெண்பாவிலும் மிளிர்கிறது. ஆன்மீகத் தேடலும், தத்துவப் புரிதலும் கொண்ட படிப்பாளர்களின் நெஞ்சிற்கு இந்நூல் ஒரு நல்விருந்தாகும். இத்தகு அரிய படைப்பைத் தமிழ் உலகிற்கு வழங்குவதில் வையைப் பதிப்பகம் மிக்க மகிழ்ச்சி யடைகிறது.

முனைவர் புலவர் **ச.ந.இளங்குமரன்**
வையைப் பதிப்பகம், தேனி – நாகலாபுரம்

வாழ்த்துப் பா

ஈரோட்டு வேந்தன் இசைந்தகந்த சாமிமகிழ்ந்(து)
ஆரா அமுதாய் அளித்தாரே – சீராக
நானும்நீ யும்;எனும் நற்பா நாற்பதும்
தேனாய் இனிக்கும் தெளிந்து.

நெஞ்சத்துத் தூய்மை நிறைந்த குணத்தோடு
வஞ்சமிலா ஈரோட்டு மன்னவராம் – கஞ்சமலர்ப்
பாவலராம் கந்தசாமி பாடியநூல் நானும்நீ
மேவுலகில் வாழ்க மிக.

தேனிமா வட்டத் தகைசால் வருவாய்சேர்
ஞானி யெனப்பணி ஆற்றினாரே – மாநிலத்தில்
மக்களின் நன்மதிப்பை மாண்போடு பெற்றாரே
மிக்க புகழ்கந்த சாமி.

வையையார் பெற்ற தமிழ்ச்சங்க மாண்பினிலே
ஐயமிலா 'வாசிக்க லாம்வாங்க' – வையத்தில்
நூல்வெளியீட் டோடு நுழைந்து சிறப்பித்தார்
நூல்வல்லார் ஈரோட்டுக் கோன்.

ஈரோட்டுப் பள்ளிஇளம் கல்லூரி மாணவரும்
பாராட்ட, மக்களெலாம் போற்றவே – சீரோங்கும்
ஆட்சியராய் ஏற்கும் அறிவுச் சுடரன்றோ
காட்சியினில் எளியநங் காப்பு.

பண்பாளர் வாசிப்பில் பற்றுடையார் எந்நாளும்
விண்போலும் நன்மதிப்பு மிக்கநண்பர் – நண்புகந்த
கந்தசாமி வாழ்க கலியுகத்துக் காவலனாய்
செந்தமிழால் வாழ்த்துவோம் சேர்ந்து

முனைவர் **ச.ந..இளங்குமரன்**

நானும் நீயும்



பாவலர் ச.கந்தசாமி

பாவலர் ச.கந்தசாமி

நானும் நீயும்

அறிமுகம்

தன்னை அறிந்துகொள்ள முயல்வது ஒரு சாதாரண தொடக்கம்தான். அதில் தொடர்ந்து பயணிக்கும் போது எதிர்ப்படும் ஒவ்வொரு நிகழ்வும் ஒவ்வொரு பாடத்தைப் புகட்டுகிறது. கற்றுக்கொள்ளும் மனமிருந்தால் ஒவ்வொரு கணமும் புதிது புதிதாய்க் கற்றுக்கொண்டே இருக்கலாம். எதிர்ப்படும் ஒவ்வொரு படைப்பும் குருவாக இருந்து வழிகாட்டுவதை உணரலாம்.

அந்தவகையில் உள்முகப்பயணத்தில் தன்னை அறியப்புகுந்த ஒருவன் தன்னை முன்னிலைப்படுத்தித் தனதிருப்பிற்கு ஆதாரமாக விளங்கும் இயற்கையை, பிரபஞ்சத்தை, இறையாற்றலை நீயென உருவகப்படுத்தி நடத்திய உரையாடலே *"நானும் நீயும்"* என்ற நாற்பது வெண்பாக்களாக வெளிப்பட்டுள்ளது.

என்னால் எழுதப்பட்டது என்று சொல்வதை விட என்னுள் கலந்த தமிழ் என்மூலம் இதை வெளிப்படுத்தியுள்ளது என்பதே பொருத்தமாக இருக்கும். என் எல்லாப் படைப்பு களுக்கும் உற்ற துணையாக, நான் எழுதுவதற்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தோழர்.கா.லோகநாதனுக்கு நன்றி.

என்னுள் கலந்த தமிழையும், என் எழுத்தின் தன்மையையும் சரியாக உள்வாங்கி நூலாக்கம் செய்திருக்கின்ற தேனி வையைப்பதிப்பக உரிமையாளர் தொல்காப்பிய நன்மணி புலவர் ச.ந.இளங்குமரன் அவர்களுக்கு நன்றி.

ச.கந்தசாமி

ஒன்று


நானும் நீயும்

கண்ணானாய் நீயே கருத்துமானாய்; என்னிதயத்து
எண்ணமெல்லாம் நீயே நிறைந்ததால் – என்னாவேன்
நானென்று கேட்டுனை நாடினேன் நானும்நீ
தானென்று சொல்லித்தந் தாய்.. 1


இருப்பதும் நீயேஇல் லாததும் நீயே
இருக்கின்றாய்; என்னுளத்தில் நீயே; – இருப்பதைச்
சொல்ல முயன்றாலும் சொல்லில்நில் லாதநீ
மெல்ல நழுவுகின்ற மீன். 2

மகளா யெனக்கு மனைவியுமாய் நீயே
திகழ்ந்தாய் இறையே; தெளிந்த புகழாய்
வருவாய் எனதெளிய வாழ்விலும்; இன்பம்
தருவாய் துயரெலாம் தீர்த்து. 3

இருப்பதும் நீயேதான் இல்லாமை தந்து
வருத்துவதும் நீயே; உலகைத் துறப்பதிலே
இன்பம் இருப்பதனை இங்குள்ள யாவர்க்கும்
அன்பதனால் சொன்னாய் அவிழ்த்து. 4



ஒருதாயைப் போலும் ஒருநாயைப் போலும்
வருவாய்; உழவர் வயலில் எருவாய்
உனையே இடுவார்; உணவாய் மனிதர்
உனையேதான் உண்பார் உவந்து. 5



இலையாய் மலராய் இனிக்கும் கனியாய்
தலையாய் உடலாய் தெரிந்தும், மலையாய்
மடுவாய் பிரிந்தும் மருளால் திகழ்வோய்
தொடுவா அருளால் தொடர்ந்து. 6

ஒன்று

ஓதியும் பாடியும் உன்னடிநான் நாடுகின்ற
சேதியும் உன்னிடம் சேரலையோ? – ஆதியும்
அந்தமு மில்லா அருட்பெருஞ் சோதியே
எந்தன்வாழ்க் கையிலொளி யேற்று. 7

உளமெல்லாம் நீயே உறைந்திருக் கின்றாய்:
வளமெல்லாம் நீயேயென் வானம் – நிலமெல்லாம்
நீயே; இருக்கின்றேன் நானிங் குயிரோடு
நீயிங் கிருப்பதனால் நீடு. 8


கொண்டாட்டம் நீயே கொடைஎல்லா மு(ம்)நீயே;
திண்டாட்டம் தந்து தெளிவளிக்கத் தொண்டாற்றும்
தூயவனே; உள்ளத்தின் ஊற்றதனை தூர்வாரும்
மாயவனே மாசகற்று வாய். 9

உருக்கொண்ட எல்லாம் உனதுவடி வாகும்;
இருக்கு மனைத்திலும் நீயே இருக்கின்றாய்;
எங்கும் நிறைந்தவனே ஏழையென் உள்ளத்தில்
தங்கும் மறைபொருளும் நீ. 10


நின்னருள் காற்றில் நடமாடும் ஓர்மரம்நான்;
என்னநீ சொன்னாலும் என்தலைதன் னாலாடும்;
என்னுடல் பூமியில் எங்கேநீ பெய்தாலும்
இன்னமுதாய் ஏற்பேன் இசைந்து. 11

மறவாது நாளும் மனதாலே நானும்
உறவாகத் தான்நினைத்தேன் உன்னை – பிறவாத
தன்மை அருள்கின்ற தேவே தவறாமல்
உண்மை எனக்கும் உணர்த்து. 12

உச்சியில் நின்றாடும் வேந்தே; எசமானை
நச்சிப் பிழைக்கின்ற நாயென்னை – எச்சில்
தொழுதுண்ண ஏங்கித் திரிந்தவனை உன்னைத்
தொழுமெண்ணம் தந்து தழுவு. 13



ஒளித்தாய் உனையே உளதாய் இலதாய்;
அளித்தாய் தமிழுனைநான் பாட; – ஒலித்தாயென்
உள்ளத்தில் ஓங்கார உட்பொருளாய்; மட்டியெந்தன்
கள்ளத் தினையொழித்தே கா. 14



உடல்தந் ததற்குள் உயிர்தந்து வாழ்வில்
இடர்தந்து பின்னது நீங்க – இடமும்தந்(து)
எங்கும் உடன்நின்று செல்லத் தடம்தந்தாய்;
இங்கும் எனதாய் இரு. 15

பிறவிப் பெருநோயைப் பற்றி யிருந்தேன்;
பிறவாமை தந்த மருந்தே – துறவெனும்
நேர்வழி காட்டியுந்தன் நெஞ்சில் குடியிருக்கும்
பேர்வழியாய்ச் செய்தாய் பரிந்து. 16

ஏனென் றெனக்கும் விளங்கிடத் தானில்லை;
நானென்றும் நீயென்றும் சொல்வதற்குத் தானென்றும்
நாவில் இனிக்கிறது; வண்டெனக்கு வேறான
பூவில் இனிப்பதைப் போல். 17

என்னுள் நிறைந்ததும் என்னுள் கலந்ததும்
என்னுள் எனதென்னும் எண்ணமாய் – இன்னும்
இருப்பதும் நீயென்றால் என்னிறையே உந்தன்
திருப்பதம் தானெனக்குத் தீர்வு. 18

ஒன்று

பஞ்சில் நெருப்புவந்து பற்றி எரிவதுபோல்
நெஞ்சில் எரிகிறது நின்னருள் – எஞ்சுவ
தேதுமில்லை நானெனும் ஓர்மையும் நன்றொடு
தீதுமில்லை நின்றாய் தனித்து. 19

ஓடி விளையாடி ஓய்ந்த குழந்தையாய்
ஆடிக் களைத்திட்டேன்; அன்பாலே – நாடி
வரும்போது நானுன்னை யன்றிவே றொன்றும்
விரும்பாத வாழ்வளிக்க வா. 20


கடலிலே வாழ்ந்தும் கடலறியா மீன்போல்
உடலிலே வாழ்ந்துவந்தேன்; உந்தன் – கடல்போலும்
தோற்றத்தைக் கண்டுகொள்ளத் தூண்டிவிட்டாய்; என்னுள்ளே
மாற்றத்தைக் கண்டேன் மகிழ்ந்து. 21

நானென்ற வொன்றையே நீயெனக் கொள்கின்றேன்,
வானென்ற வொன்றே நிலம்நீராய்த் தானெங்கும்
நிற்பதைக் கண்டபின்; நீயென்னை ஏற்றதும்
கற்பதை விட்டேன் கனிந்து.. 22


ஏற்பா யெனைநீ எனவே அழைக்கின்றேன்;
தோற்பேன் எனநான் நினைக்கவில்லை; – நோற்பேன்
உனையெந்தன் நெஞ்சத்தின் உள்ளே ஒளியாய்;
வினையெல்லாம் தீர்ப்பாய் விரைந்து. 23

அகத்தில் ஒளிர்கின்ற அன்பின் விளக்கே!
முகத்தில் ஒளிதரும் மூல விளக்கமே!
உண்மையே! இன்மையே உள்ளம் குளிர்விக்கும்
தன்மையை எந்தனுக்குத் தா. 24

இன்பமே நாடி இறைமறந்த செய்கையால்
துன்பம் மிகவுழன்று சோர்ந்திட்டேன்– உன்பதமே
உய்விக்கும் என்றுநான் உன்னடிமை யாகிநின்றேன்
மெய்ப்பித்தல் உந்தன் பொறுப்பு. 25



தெற்கும் வடக்கும் தெரியா எனைநானே
விற்கும் படிக்கு வினைதந்தாய் – கற்கும்
படியெனை ஆளாக்கிப் பார்க்கவும்கண் தந்துன்
அடியினைநான் காண அருள். 26




எங்கோ எதிலோ இருக்கின்றாய் நீதானென்
றெங்கெங்கோ தேடியலைந் தேங்கிநின்றேன்; – இங்கே
இருக்கின்றாய் என்னுளென்றே இன்றறிந்தே நானிங்
கிருக்கின்றேன் உன்னோ டிசைந்து. 27

உன்னைச் சரணடைந்தே உள்ளம் தெளிவடைந்தேன்;
என்னையு மோராளாய் ஏற்றுக்கொள்; – பின்னுமோர்
விண்ணப்பம் உண்டென்னை வில்லேந்தும் கல்லாத
கண்ணப்ப னைப்போலாக் கு. 28


ஓட்டுக்குள் நின்ற உயிரெனக்குத் தாய்தந்த
சூட்டுக்குக் காரணமே; செந்தமிழ்ப் பாட்டுக்கு
பண்ணிசையாய்த் தோன்றுகின்ற பூரணமே; நின்னருளால்
கண்ணிமைபோல் என்னையும் கா. 29

காற்றாய் எனக்குள் கலந்தவனே; பொங்கிவரும்
ஊற்றாய் எனக்குள் நிறைந்தவனே – ஆற்றா
தழுதுநான் வாடத்தான் ஆசையோ; உன்னை
தொழுதுநின் றேன்துயர் தீர். 30

இருளகற்றும் நல்லொளியே இன்னமுதும் நீயே;
அருளகத்து நாயகனே; ஆசை உருவெடுத்து
வான்போல் வளர்கிறது வேந்தே; எனையுந்தன்
தேன்போல் மொழிகொண்டு தேற்று. 31



கண்ணுக்கு நெய்யாய்க் குளிர்தரும் காட்சியே;
மண்ணுக்கு நட்பான மாமழையே; – பெண்ணுக்கு
வாய்த்த பெருங்குணத்து வானவனே; என்னைநீ
ஏய்த்தல் முறையோ இயம்பு.. 32



உடலுடன் மெய்யிருக்கும் உண்மையைப் போல
கடலுடன் மீனிருக்கக் கண்டேன் – மடலுடன்
சேர்ந்து வரும்எழுத்தாய் சேர்ந்திருப்பேன் உன்னுடன்நான்
ஓர்ந்திருப்பேன் உள்ள துணர்ந்து. 33

உப்பா யிருந்தேன் உலர்நிலை யில்நானும்
தப்பா யிருந்தன யெல்லாமும் – முப்பாலும்
கண்டுநான் உன்னில் கரைந்து கடலானேன்;
விண்டுசொல ஒன்றுமில் லேன். 34

அரும்பாய் மலர்ந்தே அருந்தேன் கொடுத்தாய்;
கரும்பாய் இனித்தாய்; கனியாய் – விருந்தாகக்
கண்டவர் உண்ண விளைந்திட்டாய்; கண்டதும்
உண்டதும் நீயென் றுணர்த்து.. 35


தொடக்கமும் நீதான் தொடர்வதும் நீதான்;
கடக்க முயலும் கடலும் கடக்க
உதவும் கலமுமாய் உன்னையே கண்டேன்;
கதவுன்னுள் சென்றேன் குனிந்து. 36

அசையா திருந்தே அசைத்தாய் உலகை;
அசையா யிருந்தே அமைந்தாய் – இசையாய்;
விசையா யிருந்தே வளர்த்தாய் உயிரை;
திசையாய்த் திகழ்வாய் தொடர்ந்து. 37

நெருநலும் இன்றும்நீ; நாளையும் நீதான்;
பருவமும் ஆகிய நீயே – உருவமும்
அல்லாத ஒன்றுமாய் அண்டத்தைப் பேணுகின்றாய்
இல்லாத ஒன்றா யிருந்து. 38

தூய்மை வடிவம்நீ; துள்ளும் இளமைநீ;
நோய்மையும் தந்திடுவாய் நேசத்தால்; – வாய்மையும்
நீயே; வழக்கத்தில் நில்லாத வாழ்வளிக்கும்
தீயே விடுதலை தா. 39

தன்னை அறியும் தவத்தில் விழுந்தவனை
உன்னை அறியென ஊக்குவித்தாய் – என்னை
எனக்களித்து என்னறிவைத் தூண்டியதால் என்னை
உனக்களித்தேன் உள்ள துணர்ந்து. 40



ஒன்று

ஒன்று



பாவலர் ச.கந்தசாமி

பதிப்புரை

முரண்களைக் கடந்த முழுமையின் காட்சி

எண் வரிசையின் தொடக்கமாகவும், வினையின் இணைப்பாகவும் விளங்கும் 'ஒன்று' என்ற ஆழமான தத்துவப் பொருளை மையமாகக் கொண்டு மலர்ந்துள்ளது இந்நூல். எளிய சொற்களின் வழியே மெய்ப்பொருளைத் தேடும் பாவலர் ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்களின் சிந்தனை வீச்சு இந்நூலில் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது.

இரவு–பகல், இன்ப–துன்பம், பிறப்பு–இறப்பு என உலகியலில் நாம் காணும் எதிர்நிலை முரண்களை எல்லாம் ஒன்றாகக் காண்பதற்கு ஒரு தனித்துவமான உள்ளத்தெளிவு தேவைப்படுகிறது. வெறும் சொற்களால் எளிதில் விளக்கிவிட முடியாத அந்தப் பரம்பொருளை, செம்பொருளை, ஐம்பது வெண்பாக்களின் துணையோடு ஆசிரியர் அணுவணு வாகப் பிய்த்துப் பார்த்துள்ளார். ஒன்றை பலகோணங்களில் பார்த்துப் புரிந்து கொள்வதற்கான இந்தச் சிறு முயற்சி, வாசகர்களின் அகக்கண்களைத் திறக்கும் வல்லமை கொண்டது. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் ஆழ்ந்த வாசிப்பனுபவமே இப்பாடல்களின் அடித்தளமாகும். தேடும் மனம்கொண்ட வாசகர்களுக்கு நல்வழிகாட்டியாகத் திகழும் இந்நூலை வெளியிடுவதில் வையைப் பதிப்பகம் பெருமிதம் கொள்கிறது.

வாழ்த்து வெண்பா

ஒன்றெனும் தத்துவ உள்மனத்து மெய்ப்பொருளை
நன்றென வெண்பாவால் நாட்டியே – பண்பாளர்
கந்தசாமி ஈரோட்டுக் காவலர் தந்ததிந்த
ஒன்றென்னும் நூல்வாழ்க ஓர்ந்து.

ஒன்று

எண்ணிலா இன்பமும் ஈரோட்டார் தந்ததிந்த
ஒன்றென்னும் வெண்பா உரைக்குமே – அண்ணல்
நலம்கந்த சாமியிந்த நானிலமே போற்றப்
புலவராய்ப் பல்லாண்டு வாழ்க.

முனைவர் புலவர் ச.ந.இளங்குமரன்

ஒன்று

அறிமுகம்

ஒன்று என்று நாம் பயன்படுத்தும் பெயர்ச்சொல் எண்களின் வரிசையில் முதலாவது எண்ணைக் குறிக்கும். அந்த ஒன்று எனும்சொல் வினைச்சொல்லாக ஏதொன்றுடனும் ஒன்றி யிருப்பதைக் குறிக்கும்.

இரவுபகல், இன்பதுன்பம், பிறப்பிறப்பு எனும் எதிர்நிலை யாகக் காணப்படும் முரண்களை ஒன்றாகக் கருதுவதற்கு ஒரு உள்ளத்தெளிவு தேவைப்படுகிறது. இத்தெளிவை நோக்கிப் பயணப்படுகையில் கிளர்ந்த எண்ணங்களின் தொகுப்பே இந்த வெண்பாக்கள். ஒன்றை பலவிதமாகப் பலகோணங்களில் பார்த்துப் புரிந்து கொள்வதற்கான சிறு முயற்சி.

எத்தனை தூரம் அதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்கின்றோமோ அத்தனை தூரம் அது குழப்பத்தை விளைவிப்பதாகவே தெரிகிறது. வெறும் சொற்களால் புரிந்து கொள்ள இயலாத மெய்ப்பொருளை நான்கடியில் வெண்பா மூலமாக சொற்களின் துணையால் புரிந்துகொள்ள முயன்றதன் வெளிப்பாடு இப்பாடல்கள்.

தேடும் மனநிலையில் தனித்துப்பயணிக்கும் யாரோ சிலர் இதனைப் புரிந்துகொண்டு புன்னகைத்தால் இப்பாடல்களை வெளிப்படுத்திய உள்ளமும் இணைந்து புன்னகைக்கும்.

என் எல்லாப் படைப்புகளுக்கும் உற்ற துணையாக, நான் எழுதுவதற்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தோழர் கா.லோகநாதனுக்கு நன்றி.

ஒன்று

ஒன்றெனும் சொல்லில் ஒருபொருளைக் கண்டதால்
ஒன்றெனும் சொல்லை விளக்கவந்தேன்; – ஒன்றெனும்
ஏவலில் உண்டோர் வினையென்றே கண்டதனைக்
காவலாய் கொண்டேன் கலந்து .

ச.கந்தசாமி

ஒன்று

ஒன்றை உணர்வதும் ஒன்றா யிருப்பதும்
ஒன்றல்ல; ஒன்றான ஒன்றெதிலும் – ஒன்றாமல்
உள்ளதனை ஓர்ந்திட்டால் வென்றிடலாம்; ஒன்றாகா
உள்ளத்தினை ஒன்றால் உயர்த்து. 1

ஒன்றே ஒருநூறாம் ஒன்றேதான் ஆயிரமும்:
ஒன்றே பலவாய் உருமாறி – ஒன்றதன்
தன்மையைக் காட்டாமல் உள்ளத்தில் உண்மையாய்
இன்மையைக் காட்டும் இனிது. 2


ஒன்றிருக்க யின்னொன்றை ஒன்றெனக் கண்டவர்கள்
ஒன்றி யிருக்கவொண் ணாதவராம் – ஒன்றி
யிருப்பது யாதென் றியம்பியவ் வாறே
இருப்பவரோ டொன்றா யிரு. 3

ஒன்றே யிரண்டாக ஒன்றில் மறைந்துளமற்
றொன்றாகத் தோன்றுவதை வாழ்நாளில் – என்றேனும்
கண்டுகொண்டால் உய்ந்திடுவாய்; கண்ணின்றிக் கண்டதை
விண்டுசொல்ல எண்ணா துணர். 4


என்று வருமோ எனக்கோர் தனியிடம்
வென்றுதரு மோதவமும் தானமும்; – ஒன்றுண்டிங்
கென்றறிந்து எப்போதும் அந்நினைப்பில் ஆழ்ந்திட்டால்
அன்றுவரு மோஅவ் வருள். 5

ஒன்றை மறந்தேனவ் வொன்றின் தயவினால்
ஒன்றை யறிந்தே யுணர்ந்திட்டேன் – ஒன்றதுவே
எங்கு மிருப்பதையும் எப்போதும் காப்பதையும்
இங்கறிந்தேன் என்வாழ் வினிது. 6

ஒன்று பெயர்ச்சொல்லா அன்றி வினைச்சொல்லா
என்றொருவர் எண்ணுவ தெவ்வாறோ? – ஒன்றதுபோல்
காட்டும் தனைவினையாய் பேராய்க் குவலயத்தில்
நாட்டும் தனதியல்பை நன்கு. 7




ஒன்றுதான் இங்குதான் உண்டுதான் என்றுதான்
என்றுநான் கண்டேனோ என்னுள்தான்– அன்றுதான்
ஒன்றும்நான் இல்லெனும் உண்மை யுணர்ந்திட்டேன்
இன்றும்நான் ஒன்றேதான் ஓர். 8




உண்டென் பவருமுண்டு ஒன்றுமிலை என்பாரும்
உண்டெங்கும்; உண்மை யுணராதார் – உண்டிலை
என்பதைத் தாண்டியொன்று எங்குமுள தென்றுணர்ந்தால்
மன்பதையுள் உண்டாகும் மாண்பு. 9

ஒன்றே யுடலுயிரும் ஒன்றே இராப்பகலும்
என்றே தெளிந்தார் எவருக்கு மொன்றே
விளக்கா யிருந்து வழிகாட்டும்; கேட்டால்
விளக்கம் கிடைக்கும் விரைந்து. 10




ஒன்றாகச் செய்கதவம்; ஒன்றாகச் செய்கதினம்;
ஒன்றாக நின்றாலே வேற்றுமைகள் நன்றாக
ஓடிவிடும் தூரத்தில்; ஒன்றானால் நல்லறங்கள்
கூடிவரு முன்பின்னால் காண். 11




ஒருகணமும் ஒன்றே; ஒருயுகமும் ஒன்றே
ஒருகணத்தில் பெற்ற ஒளியே – ஒருவர்க்கு
நிற்கும் யுகமெங்கும் நீங்கா வெளிச்சமாய்க்
கற்கும் வழியிது காண். 12

எந்தவொன்றை யாராலும் எப்போதும் சொல்லெனும்
பந்தமொன்றால் கட்ட வியலாதோ – அந்தவொன்றைச்
சொல்லாம் கயிற்றினால் சேர்த்திடத் தான்முயன்றேன்
எல்லாம் விழலுக்கு நீர். 13




கண்கள் இரண்டெனினும் காட்சியது ஒன்றேதான்;
எண்கள் பலகோடி என்றாலும் – எண்களெலாம்
தோன்றுவது ஒன்றிலே யாதலால் எண்ணத்தில்
ஊன்றுவோம்நாம் ஒன்றெனும் வித்து.. 14




ஒன்றாகிப் போனால் உரைக்கவொண் ணாதென்றே
ஒன்றா மலிருந்தேன் உன்னுடன்நான் – ஒன்றான
மெய்ப்பொருளே ஒன்றே யிரண்டாய்க் கருதியென்னை
உய்த்தருளே என்சொல் உணர்ந்து. 15

ஒன்றென் றிருந்திட ஒத்துவரும் எல்லாமும்
ஒன்றென் றிருந்திடுவாய் ஒன்றினுள் – ஒன்றென்றே;
ஒன்றினைத் தாண்டியிங்கு வேறொன்று மின்மையால்
நன்றிதை ஏற்றோம் நயந்து. 16




ஒன்றுதா னெங்கும் உருவா யருவுமாய்
நன்றுதான் நாளும் நடத்துகின்ற தென்றுதான்
யாரும் அறிந்திட்டால் யாவையும் ஒன்றுதான்
பாருமெனச் சொல்வார் புரிந்து. 17




இருப்பதும் ஒன்றுதான் இன்மையும் அஃதே;
விருப்பமும் மாறாம் வெறுப்பும் கருத்தினில்
மட்டுமே நிற்குமாம்; மெய்மனத் தூயவர்க்கு
எட்டுமே ஒன்றிங் கெளிது. 18

ஒன்றுட னொன்றந்த ஒன்றினுள் மற்றுமொன்று;
ஒன்றுடன் வேறுபட்ட ஒன்றுமே யொன்றுதான்
என்றுணர்ந்தார் கூடநின்றுன் எண்ணத்தில் ஒன்றதனை
நன்றுணர்ந்து வாழ்வை நடத்து. 19




ஒன்றேசெய் உன்னை உலகத்தார் வாழ்த்தட்டும்;
நன்றேசெய் நாளும் நலம்பெறத்தான்; – இன்றேசெய்
ஒன்றுணர்ந்த உள்ளத்தால்; ஒன்றுணர்தல் தாய்ப்பசுவைக்
கன்றுணர்ந்து கொள்வதெனக் கூறு. 20




அதுவிருந்தால் போதும் எனச்சொல்வார் கொஞ்சம்
இதுவிருந்தால் போதுமென்பார் கொஞ்சம் – மதுவிருந்தால்
போதுமென்பார் கொஞ்சம்;நான் பாடுமொன்று இங்கிருத்தல்
போதுமென்பேன் நன்றாய்ப் புரிந்து. 21

ஒன்றை யறியாதார் ஒன்றை யுணராராம்;
ஒன்றென் றெதையெதையோ வாதிப்பார் – ஒன்றெதிலும்
ஒன்றாமல் ஒன்றாக வேயிருக்கும்; அங்ஙனம்நீ
ஒன்றாமல் ஒன்றா யிரு. 22




ஒன்றெதையும் அண்டாதாம்; ஒன்றெதையும் வேண்டாதாம்;
ஒன்றெரியும் சூரியனாம் வானத்தில் – ஒன்றேதான்
காரிருளாம் அண்டத்தில்; காலத்தை ஆக்கிவிட்ட
ஓரிறையாம் ஒன்றே யுணர். 23




ஒன்றே உருவாக்கும் ஒன்றே உருவாகும்;
ஒன்றே பிரிவுற்று வேறாகி – ஒன்றை
மறைக்கும்; தெளிந்தார்தம் முன்நிற்கும்; அஃதே
இறைக்குணம் என்றே யிரு. 24

ஒன்றெனது உள்ளத்தில் ஒன்றா யொளிர்வதுவும்
ஒன்றெனது மெய்யாய் விளங்குவதும் – ஒன்றென
ஊரார் வழங்குகின்ற ஒன்றல்ல என்றறிந்தேன்;
பேரா பெரிது புகல். 25



ஒன்றாக ஒன்றிருக்கும் ஓர்மொழியும் சொல்லாமல்;
ஒன்றாக ஏலாதார் ஓர்மொழியால் – ஒன்றாக
நூறாகப் பாடிடுவார்; நூலாகப் பண்ணிவைப்பார்
வேறாக ஒன்றை உணர்ந்து. 26



ஒன்றிலிருந் தெல்லாம் உருவான தென்கின்றார்;
ஒன்றிலிருந் துண்டான எல்லாமும் – ஒன்றதன்
கன்றாகத் தானே கருதப்படும்; பாவித்தேன்
நன்றாக ஒன்றென நான். 27

அன்பும் அருளும் அறிவுடன் மூன்றாக
இன்பமுடன் துன்பம் இரண்டாக – உன்பதம்
ஒன்றே உறுதிப் பொருளென் றுஉணர்ந்தேன்.
ஒன்றே உறைந்திடெனக் குள்.. 28

நங்கை யொருத்தி நடனமா டும்போதில்
அங்கே யிருப்ப திரண்டல்ல – நங்கை
அவளே நடனமாய் ஆகின்றாள்; ஒன்றாய்
அவளே திகழ்கின்றா ளே. 29

நடக்கின்ற போது நிகழ்வதொன்றே ஓய்வாய்க்
கிடக்கின்ற போதும் திகழும்; – கடக்கின்ற
எல்லாமிங் கொன்றெனும் எண்ணத்தால் ஏதொன்றும்
சொல்லாமல் செம்பொருளைச் சேர். 30

உண்கையில் ஒன்றே உணவாகத் தோன்றுவதும்;
உன்கையில் உற்றறிவ தெல்லாமும் – உண்மையில்
ஒன்றே; உலகமும் விண்ணுமிங்கு வேறல்ல
வென்றே தெளிவோ டிரு. 31

உள்ளிருக்கும் ஒன்றே வெளியிலும் நின்றிருக்கும்;
கள்ளிருக்கும் பூஞ்செடியில் குத்துகின்ற முள்ளிருக்கும்;
ஒன்றிலொன்று வேறுபட்டும் ஓரிடத்தே வாழ்விருக்கும்
ஒன்றிலொன்றாய் வேறுபட்டே வாழ்.. 32


கிளையும் மலருமொன்றே வேரும் மரத்தில்
விளையும் கனியதுவும் ஒன்றே; – களையும்
பயிரதுவும் ஒன்றே; பயன்கருதா விட்டால்
உயிருருவாய் இவ்விரண்டு மொன்று. 33

ஒன்றை யுணர்ந்தவனும் ஒன்றின் பகுதிதான்;
ஒன்றை யறியாத வன்கூட– ஒன்றை
யுடையவனே; ஒன்றை உணர்ந்தோர் தகர்த்தார்
தடையதனை ஒன்றாகித் தான். 34


ஒன்றிருப்ப தாலேதான் ஒன்றாக நானுமிங்கு
ஒன்றி யிருக்கின்றேன் ஓராளாய்; – ஒன்றில்லை
என்றானால் என்வாழ்க்கை என்னாகும்; ஒன்றுணர்ந்து
வென்றுவிட்டேன் ஒன்றில் உறைந்து. 35

ஒன்பதுவாய் யாக்கைக்குள் ஒன்றிருந்து ஆள்கிறது;
அன்பதுதான் அஃதென் றறிந்துகொண்டேன் – ஒன்பதுவாய்
பாலின்றி நிற்குமிதைப் பார்க்கவும் வொண்ணாதே;
நூலின்றிக் கற்றேன் நயந்து. 36

ஒன்றாடும் நாளுமிங் கோயா துலகத்தில்;
ஒன்றாடும் நாளுமிங் குள்ளத்தில் – ஒன்றாடும்
காட்சியைக் கண்ணின்றிக் கண்டார்தம் மாட்சியினைச்
சொல்லவும் உள்ளதோ சொல். 37



உணவாகும் ஓருயிரை உண்டவுயிர் பின்னால்
உணவாகும் மற்றோ ருயிர்க்கு; – குணமாகும்
இஃதே குவலயத்தில்; இத்தனைக்கும் காரணம்
அஃதே ஒன்றென் றறி. 38



ஒன்றே விதையாகும் ஒன்றே மரமுமாகும்
ஒன்றே வினையும் விளைவுமாம் – ஒன்றே
உளதெல்லாம் இன்மையும் ஒன்றேதான்; நன்றே
உளமெல்லாம் தந்தே னுணர்ந்து. 39

விட்டு விலகிவெகு தூரம்நான் சென்றாலும்
தொட்டுத் தொடரும் பொருளொன்றைக் கட்டும்
கயிறாக நிற்பதனைக் கண்டேன்வொன் றாக
உயிராக நிற்கு மது. 40

ஒன்றே இயற்கையும் ஒன்றே இருப்பதுவும்
ஒன்றே விரிவானும் விண்மீனும் – ஒன்றே
உலகாளும் செம்பொருள்; ஒன்றை யுணர்ந்தார்
பலகாலம் வாழ்வார் படிந்து. 41

திசையெங்கும் சென்றுபலர் தேடியும்கிட் டாத
விசையதனை, ஒன்றியயென் உள்ளத் திசையதனை,
நான்மட்டும் மாந்துகின்ற நல்லமுதைப் பாடுவேன்
தேன்சொட்டும் செந்தமிழால் தான். 42

நில்லாமல் ஓடுமொரு நல்லாற்றை, வார்த்தையால்
சொல்லாமல் கண்டுகொள் செம்பொருளாய்; – கல்லாமல்
தக்கவராய் மாற்றுமொன்றைத் தன்னியல்பால்
நிற்குமொன்றைப்
பக்கபல மென்றெண்ணிப் பார். 43

காலத்தால் மூத்தவொன்றைக் காற்றுக்கும் நீருக்கும்
காலனுக்கும் முந்தியதாய்க் கூறுமொன்றை – ஞாலத்தில்
ஊனுயிர் தோன்றுமுன்பே ஊழியாய் நின்றவொன்றைத்
தானுயிராய்க் கொண்டோம் தழைத்து. 44


அன்னை யெனையீன்றாள் அன்பெனக்குக் காட்டிவிட்டாள்;
தன்னை இனம்காட்டித் தாள்காட்டி – என்னைப்
பித்தனாய் செய்த பெரும்பொருளை ஒன்றாக
சித்தத்தில் கொள்வேன் சிரித்து. 45

கூட்டல் கழித்தல் கணக்கில் வராதவொன்றை;
வேட்டல் வணங்குதல் வேண்டாமல் – ஈட்டல்
வகுத்தல் புரியுமொன்றை உள்ளத்தில் ஒன்றாய்த்
தொகுத்தல் தெளிந்தார் தொழில். 46


சுதந்திரமாய் ஊருக்குள் சுற்றிவரும் தென்றல்
இதந்தருமே மாந்தர்க் கியல்பால் – பதந்தருமே
மேம்பட்ட வொன்றென மெய்த்தவத்தார் சொல்வாரே
தாம்பட்ட பாட்டைத் தெரிந்து. 47

வினைமறந்து பித்தராய் வீதியில்செல் வாரும்
தனைமறந்து செய்தவத்தால் தத்தம் – மனைமறந்து
ஒன்றில் கலந்தாரும் ஒன்றில் கரைந்திழைந்து
அன்றில்போல் வாழ்வார் அணைந்து. 48

வெளியைக் கடந்திட்ட வொன்றை உலகில்
வளியை உலவவிட்ட வொன்றை – எளிதில்
கிடைக்கின்ற தென்றுபலர் கண்டுகொள்ளா வொன்றை
அடைக்கலமாய்க் கொண்டேன் அறிந்து. 49



ஒன்றுள தெங்குமென்றார் ஒன்றுள தென்றுமென்றார்
ஒன்றுள தெங்குமென்றும் என்றாலிங்(கு)
ஒன்றிலொன்றாய்
இங்கிருக்கும் நானுமவ் வொன்றல்லோ; எந்தனுக்கும்
பங்கிருக்கும் தானே பகர். 50




ஒன்று

நானே மெய்ப்பொருள்



பாவலர் ச.கந்தசாமி



பதிப்புரை

அகத்தின் ஒளியைக் காட்டும் ஞானப் பேழை

'நான்' என்னும் தத்துவத்தின் உச்சத்தையும், நவீன இந்திய மெய்ப்பொருள் மரபின் ஞானத்தையும் அடியொற்றி உருவான உன்னதத் தொகுப்பு 'நானே மெய்ப்பொருள்'. ஒரு சிறந்த வாசகராக, சிறீ நிசர்கதத்த மகராஜ் அவர்களின் 'நான் பிரம்மம்' என்ற தத்துவ நூலை உள்வாங்கி, ஈரோடு மாவட்ட ஆட்சியர் பாவலர் ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்கள் படைத்துள்ள நாற்பது வெண்பாக்கள் ஞானத்தின் திறவுகோலாகும்.

"எல்லாமும் நான்தான்; எதுவுமே நானில்லை; இல்லாத ஒன்றாய் இருக்கின்றேன்" என்ற அத்வைத தத்துவத்தின் சாரத்தை, எளிய தமிழில் பாமரரும் உணரும் வண்ணம் பாடியுள்ளார் ஆசிரியர். உலகெலாம் மெய்தேடும் சாதகர்கள் கண்டடைந்த அநுபவங்களை வெண்பாக்களின் வழியே சொற்களாக்கி, இப்பாரினில் உள்ள மக்கள் உய்யும் வண்ணம் தந்துள்ளார். சூஃபி மரபின் 'அனல்ஹக்' முழக்கமும், இந்திய மெய்யியலின் சாரமும் ஒருங்கே இணையும் இந்நூல், தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய மைல்கல். வாசக நெஞ்சங்களுக்குப் பேரானந்தத்தை வாரி வழங்கும் இந்நூலை வையைப் பதிப்பகம் அகமகிழ்வோடு வெளியிடுகிறது.

வாழ்த்து வெண்பா

நானேநல் மெய்ப்பொருளாய் நானிலத்தில் வாழ்வதனைத்
தானே உணர்ந்துகந்த சாமிதான் – தேனேபோல்
பாவடித்தார் ஈரோட்டார் பார்புகழ வாழ்த்துவமே
சேவடி போற்றித் தினம்.

ஒன்று

மெய்ப்பொருளைத் தன்னுள் மிகக்கண்ட ஈரோட்(டு)
ஒப்பிலா ஆட்சியராம் தண்கந்த சாமிதான்
பாடிய நூலிது பார்புகழ வாழியவே
ஏடெலாம் போற்றும் இசைந்து.

புலவர் ச.ந.இளங்குமரன்

நானே மெய்ப்பொருள்

அறிமுகம்

உலகெலாம் மெய்தேடும் சாதகர்கள் தத்தம் மதம் காட்டும் வழியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தாம் கண்டடைந்த அநுபவங்களை மக்கள் அறியும் வண்ணம் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

கூட்டத்தில் சேராத அவர்களது மெய்பொருள் கூற்றினை ஏற்காத மக்கள்கூட்டம் அவர்களைக் கொல்லவும் செய்திருக்கின்றன. சூஃபி மரபில் அவ்வாறு 'அனல்ஹக்' நானே மெய்ப்பொருள் என முழங்கிய அல் ஹில்லாஜ் மன்சூர் மக்களால் கொல்லப்பட்டார்.

நவீன இந்திய மெய்பொருள் மரபில் 'நான் பிரம்மம்' என்று மக்களைப் பயிற்றுவித்த ஸ்ரீ நிசர்கதத்த மகராஜ் அவர்களின் நூலை வாசித்துப் புரிந்துகொள்ள முயற்சித்த போது உதித்த சிந்தனைகளே இங்கு நாற்பது வெண்பாக்களாக வெளிப்பட்டுள்ளது.

என்னால் எழுதப்பட்டது என்று சொல்வதை விட என்னுள் கலந்த தமிழ் என்மூலம் இதை வெளிப்படுத்தியுள்ளது என்பதே பொருத்தமாக இருக்கும். என் எல்லாப் படைப்புக –ளுக்கும் உற்ற துணையாக, நான் எழுதுவதற்கு தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தோழர்.கா.லோகநாதனுக்கு நன்றி.

மெய்ப்பொருளே எங்கும் மலிந்திருப்ப தாலேநான்
மெய்ப்பொருளாய் என்றும் மகிழ்ந்திருந்தேன் – மெய்ப்பொருள்
யாவரும் கண்டிடவே மெய்ப்பொருளை சொல்லாக்கிப்
பாவடித்தேன் உய்யட்டும் பார்.

(ச.கந்தசாமி)

ஒன்று

நானே மெய்ப்பொருள்

எல்லாமும் நான்தான்; எதுவுமே நானில்லை;
இல்லாத ஒன்றாய் இருக்கின்றேன் – நில்லாமல்
நாளும் சுழன்றாலும் நிற்பதாய் தோன்றுமிந்தக்
கோளும் இதற்குக் கரி. 1

பிறக்கவும் இல்லை; இறக்கவும் இல்லை;
உறக்கம் விழிப்பிவ் விரண்டை– மறக்கவும்
இல்லை; பிறக்குமுன்பே இறந்துவிட்ட எண்ணத்தால்
எல்லை கடந்தவனா னேன். 2

புறப்பொருள் நானே; அகப்பொருளும் ஆவேன்;
புறம்அக மென்னும் பிரிவை அகத்துள்
நிகழ்த்தும் அறிவதுவும் நானே; அகமாய்த்
திகழ்வதும் நானொன்றே தான். 3

முயற்சி சிறிதுமில்லை; முன்னேறும் ஆசை,
பயிற்சியென் றேதுமெனக் கில்லை – அயற்சி
தருவதற் கொன்றுமில்லை; தானாய் எனக்குள்
வருவதை ஏற்பேன் வலிந்து. 4

நான்யா ரெனும்கேள்வி; நான்யா ரெனும்பதில்;
நான்யா ரெனும்அறி வென்பதுடன்– நான்யார்
எனும்உணர்வும் நானல்ல; ஏதொன்றும் இங்கே
அனுபவமில் லாதவொன்றே நான். 5

தவிர்க்க முடியாத தன்மையுடன் ஒத்து
தவிர்க்க முடிவதை எல்லாம் தவிர்த்து
சமநிலை மாறாத தன்னிலை ஏற்றே
இமயத்தின் நேரானேன் இங்கு. 6


ஒன்று

எங்கும் எதிலும் இருக்கின்ற நானேதான்
கங்குல் பகலற்ற காட்சியாய் இங்கிவ்
விடத்திலும் உள்ளேன்; இருப்பை மறைக்கும்
மடத்தினை விட்டேன் மகிழ்ந்து. 7


அதுவோ இதுவோ அருளோ அறமோ
எதுவொன் றினையும் அறியா ததுபோல்
இருந்தேன்; ஒளியாய் எனையே உணர்ந்தேன்
வருந்தா நிலையை விழைந்து. 8

எனக்குள் உயிரும் எதிராம் உலகும்
எனக்குள் இருக்கும் அறிவை – எனக்கிங்கு
நானே வழங்கியதால் நாயகனாய் இவ்வுலகை
நானே படைத்தளித்தேன் நன்று. 9

என்னுள் இருப்பதுதான் என்னைப் படைத்ததுதான்
என்னை எனக்கேநான் யாரென்று காட்டுதற்கே
மின்னல் ஒளியாக மின்னி மறைவதுதான்
இன்னும் தொடரும் இருப்பு. 10



எனக்கும் கிடைக்கும்; எவரும் மனதில்
தனக்கும் கிடைக்கும் தவறா தெனநினைத்துக்
கேட்டும் படித்தும் புரிந்துகொண்ட ஞானமது
வாட்டம் தணிக்கும் வழிந்து. 11




பாகமாய் எண்ணும் பிழைநீங்க முற்றான
ஏகமும் நானெனும் எண்ணமோங்கும்– தாகமே
இல்லா தகைமை அடைந்தேன்; இருக்கின்றேன்
இல்லா நிலையில் இனிது. 12

இதுவுமல்லன் நானே அதுவுமல்லன் இங்கே
எதுவொன்றா யில்லாமல் ஏதோ – புதுவொன்றாய்
நிற்கின்றேன்; மெய்மனதில் நில்லாமல் வேறெதையோ
கற்பவனாய்த் தோன்றுகின் றேன். 13


உணர்வுடைய நானே உணர்வில்லா மையும்;
உணர்வோ டுமதனெதி ரோடும் – உணர்வைக்
கடந்தது மாவேன்; கடந்த உணர்வால்
கிடந்திருப்பேன் நானுள் கலந்து. 14

யாவருக்கும் இங்கேமெய் ஞானம் கிடைக்குமாம்;
யாவரும் தன்னை யறிவதற்கு யாதொரு
திட்டமும் இன்றித் திடமாய் உணர்ந்திட்டால்
வெட்ட வெளிச்சமாகும் வான். 15

சோதி தெரிகிறது; சோதி தெரிகிறது;
ஆதி விளக்கான ஆனந்த சோதி
தெரிகிறது; தேகத்தின் உள்ளே தொடர்ந்(து)
எரிகிறது கண்பாரேன் என்று. 16



வானெலாம் நானே;விண் மீனெலாம் நானேதான்;
கானெலாம் நானே; குலவிமகிழ் மானெலாம்
நானேதான் என்பதனை நானுணர்ந்த காரணத்தால்
நானேதான் எங்குமுள வான். 17



செய்பவன்நான்; இங்கே செயப்படும் எல்லாமும்
செய்பவ னாகிய என்னிடம்தான் செய்யப்
படுகிறது; செய்பவனாய்த் தோன்றுவதால் பற்று
விடுகிறது தன்னால் கழன்று. 18

சொன்னால் சிரிப்பார்கள்; சொல்லாமல் உண்மையில்
என்னால் இருக்கவும் ஏலாது – முன்னால்
தெரிவதை நானே தெளிந்ததைச் சொன்னால்
புரியாதோ வந்தமரென் பின். 19

ஒடுங்க மறுத்தேன் ஒருவனாய் நானும்
அடங்க மறுத்தேன் அளவில் – சடங்கினில்;
ஆதியில் தோன்றிய ஆதார சோதியாய்ப்
பாதியிலும் தோற்றமளிப் பேன். 20

வேறொன்றும் காணேன்; விளங்குவ தெல்லாம்நான்;
யாரொன்றும் இல்லா உலகத்தில் – பேரொன்றும்
இல்லா நிலையில் இருக்கின்ற காரணத்தால்
எல்லாமாய் நானிருக்கின் றேன். 21

என்னில் எழுவதும் என்னில் உறங்குவதும்
என்னில் எனக்கே நிகழ்வதை – என்னில்
இருந்தே உணர்கின்றேன்; இல்லை யெனில்நான்
வருந்தும் நிலைக்காளா வேன். 22

உள்ளதெல்லாம் நானெனும் உண்மையைக் கேட்டதும்
உள்ளதெல்லாம் நானென் றுணர்ந்திட்டேன் – கள்ளமெல்லாம்
மானுடனாய் என்னை மதித்ததால் வந்த(து)
ஊனுடம்பை விட்டேன் விரைந்து. 23


விளக்கும் ஒளியும்நான் உண்மையை பொய்யை
விளக்கிடும் மெய்ம்மையின் மாறா விளக்கமும்நான்;
என்னையே நான்தானென் றின்று முழுதுணர்ந்து
என்னையே போலானேன் நான். 24

தோற்றமும் ஒன்றன் முடிவும், துலங்குவது
மாற்றம் உறுவதும் மாறாது; – தோற்றமே
இல்லாத ஒன்றாய்த் திகழ்ந்திடும் தன்னுணர்வைச்
சொல்லாமல் பெற்றேன் புரிந்து. 25


மாயமும் இல்லை; மயக்கமும் இல்லையே;
தூயதொரு பாதை தெரியவர – போயதனில்
நன்றாய்ப் பொருந்திவிட்டேன்; இவ்வழியில் ஐம்புலனும்
வென்றார் வருவார் விரைந்து. 26

எங்கெங்கோ சுற்றிவந்தேன் ஏதேதோ செய்துவந்தேன்;
இங்கெனக்குள் சும்மா இருந்ததும்தான் – பொங்குமின்பம்
என்னவென்று நானறிந்தேன்; என்னுள்ளே கண்டதைத்தான்
இன்னதென்று சொல்லவந்தேன் கேள். 27

உலகனைத்தும் நானே உயிரனைத்தும் நானே;
நலமனைத்தும் செய்பவன் நானே– பலர்முனைந்தும்
எய்தற் கரியநிலை எப்போதும் என்னிடத்தில்
மெய்த்தவத்தால் நிற்கும் முனைந்து. 28




ஒன்றுமில்லை உள்ளே வெறுமைதான் உள்ளதாக
என்றறிந்து கொண்டேனோ அன்றிருந்து – ஒன்றுமில்லா
ஒன்றானேன்; உள்ளும் புறமு(ம்) இரண்டல்ல
ஒன்றெனவே கண்டேன் ஒளிர்ந்து. 29




எண்ணில் அடங்கா(து) எண்ணத்தில் நிற்காது
மண்ணில் விளங்கா மறைபொருளாய் – விண்ணில்
விரிந்து விரிந்து நிலைகொண்ட நானே
புரிந்துகொண்டேன் என்னைப் புனைந்து. 30

புதிதான தோர்வழியில் போகின்ற போது
புதிரான தோர்ஒளி வந்து – புதிதான
தோர்வெளியைக் காட்டிடத் தோற்றம் முடிவற்ற
தோர்வழியில் செல்வேன் தொடர்ந்து. 31



கற்பனை இல்லை கனவொன்றும் இல்லையதி
அற்புதமாய்த் தோன்றும் அரங்கிது; – பொற்கதவம்
தாண்டிப் புகுந்தேன்; தனிமனம் கெட்டோட
வேண்டியதைப் பெற்றேன் விரைந்து. 32




ஓருடல் தானென்றும் ஓர்மை யுடைத்தென்றும்
பாருலகில் வந்துதித்த மாந்தரெலாம் – பேருடன்
தன்னைப் பொருத்தித் தளர்ந்துவிட்டார்; நானதுபோல்
என்னை நினைப்பதில்லை யே. 33

ஒளியா யிருக்கின்றேன்; வான்முழுதும் வெட்ட
வெளியாய் யிருக்கின்றேன்; வெள்ளத் துளியாய்
யிருந்தயெந்தன் கண்திறக்க நீள்கடலாய் நிற்கும்
பெருந்தவம்செய் கின்றேன் புரிந்து. 34


மெய்யென ஒன்றுளதோ மேலுலகம் இங்குளதோ
பொய்யெனச் சொல்வோரே பார்த்திடுங்கள்–கையெனநான்
சொல்வதைத்தான் கையென்பீர் நீரும்; பொருளொன்றே
சொல்வதால் ஆகும் இரண்டு. 35

சுடாததென்னே நானும் சுடரா யிருந்தும்;
படாததென்னே நீரென்மேல் பட்டும்; – விடாததென்னே
நாளும் விழித்திருக்கும் நாடகம்; என்னோடு
கோளும் சுழல்வதென்னே சாய்ந்து. 36

நத்தையின் கூட்டிற்குள் நானிருந்தேன் நன்றாக;
சொத்தையாம் கத்திரியுள் சேர்ந்திருந்தேன்– எத்தை
எடுத்தாலும் என்பெயர் முன்நிற்கும்; யாரேனும்
தடுத்தாலும் நானே துணை. 37



கேட்கும் ஒலியெலாம்நான்; காணும் ஒளியெலாம்நான்
காக்கும் இறையெனக் கற்றவர்கள் – பார்க்கும்
திசையெலாம் நின்று தனித்தொருவன் கேட்கும்
இசையெலாம் ஆனேன் இசைந்து. 38



சுளைக்குள் பலாவினைச் சேர்த்ததும் நானே;
களைக்கும் உயிரைக் கொடுத்து– விளையை
நிறைப்பதும் நானே; நறுமலரில் தேனை
நிறைத்திடும் நானே இறை. 39

விளைந்திட்டேன் ஒன்றாய் வளர்ந்திட்டேன் நன்றாய்
வளைந்திட்டேன் நானிங்கு வானாய் – களைந்திட்டேன்
மாசதனை நாளும்; மலர்ந்திட்டேன் பூவாக
வாசனை எங்கும் இரைத்து.

ஒன்று

குறிப்புகள்